# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
...
## IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai
## CC No.275/2015

Deposition of the witness for Prosecution **PW9**
Name : குமரவேல்
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (15.06.2026)

A1, A5,A6 present,

<u>முதல் விசாரணை</u>

நான் நான் தமிழ்நாடு காவல்துறையில் பணி ஓய்வு பெற்று பணி ஓய்வில் இருக்கிறேன். கடந்த 10.02.2015 ஆம் தேதி நான் குற்றாலம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது. தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குற்ற எண். 21/2013, பிரிவுகள் 498(A), 494, 294(b), 109 and 506(1) IPC வழக்கு பதிவு செய்து முதல் கட்ட விசாரணையை குமார் காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்து என் பார்வைக்கு வைத்திருந்தால் நான் 10.02.2013 ஆம் தேதி இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இந்த வழக்கின் சாட்சிகளான ஈஸ்வரி, முருகம்மாள், செல்வம், பச்சையப்பன், செல்லையா, காந்திமதி ஆகியோர்களை விசாரித்து அந்த சாட்சிகள் எனக்கு முன்பாக விசாரித்த காவல் ஆய்வாளிடம் சொன்னது போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை

இந்த வழக்கின் ஒன்னாவது எதிரி உமாசங்கர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன் பிணை பெற்று இருந்ததால் கைது செய்யவில்லை. இந்த வழக்கில் மற்ற எதிரிகளான மணி, சரஸ்வதி, செல்வி, ராமலட்சுமி, நித்தியா ஆகியோர்கள் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களையும் நான் கைது செய்யவில்லை. இந்த வழக்கில் சாட்சிகளில் விசாரணையில் இருந்தும், எனது விசாரணையிலும் எதிரிகள் மீது குற்றம் உண்மை

என கூறப்பட்டதால் எதிரிகள் மீது 10.02.2013 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

குற்ற குற்ற இறுதி அறிக்கையில் ஐ.பி.சி. பிரிவு 494 படியான நகல்கள் எதுவும் எதிரிகளுக்கு வழங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. இரண்டாவது திருமணம் நடைபெற்றது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் திருமணம் நடந்த தேதி ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது விசாரணையில் தெரியப்பட்டது. யாருடைய விசாரணையில் தேதி ஊர்ஜிதப்படுத்தப்பட்டது என்றால் உமா சங்கர் மற்றும் செல்வி இருவரும் ஒன்றாக கணவர் வீட்டில் இருந்ததை ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. எங்க வீட்டில் எந்த ஊரில் எந்த தெருவில் குடியிருந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் மேல மெஞ்ஞானபுரம் சுந்தர பாண்டியபுரம் அம்மன் கோவில் தெருவி' இருந்தார்கள். அந்த வீடு வடக்கு பார்த்த வீடா, தெற்கு பார்த்த வீடா, இரண்டு மாடி கட்டிடமா, குச்சி வீடா, ஓட்டு வீடா என்று தெரியாது என்றால் தெரியும் தெற்கு பார்த்த வீடு. நான் சொல்வது போல் அந்த வீடு தெற்கு பார்த்த வீடு இல்லை கிழக்கு பார்த்த வீடு சம்பவ இடத்திற்கு நான் போகவில்லை என்றால் சரியல்ல. சிகரெட்டால் துன்புறுத்தியதற்கு ஏதாவது மருத்துவ ஆவணங்கள் எதுவும் எனக்கு முன்பு இருந்த காவல் ஆய்வாளர் குமார் வாங்கி இருந்தாரா என்றால் இல்லை. எந்த இடத்தில் சுடப்பட்டிருந்தது என்று பார்த்தேனா என்றால் இல்லை. அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை வழக்கிற்காக நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குடும்பத்தின் உள்ள மரியாதை கருதி அதனை வெளியில் சொல்லாமல் இருந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படி சொல்லி பதிவு செய்த 161 வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் உள்ளது. திருமணமான கொஞ்ச நாளில் இருந்து 10.05.2011 வரை நிகழ்வு நாள் என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது 29.08.2012 சுமார் ஒன்றரை வருடம் கழித்து தான் காவல்

நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் ஒரு வருடத்திற்கு முன்பே காவல் நிலையம் வந்து புகார் கொடுத்துள்ளார்கள். இருவரையும் விசாரித்து அனுப்பப்பட்டுள்ளது. அந்த மனுவில் கொடுத்த புகார் மனு மற்றும் வாக்குமூலம் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் செய்துள்ளேன். அந்த மனுவின் ஆவணங்களை எதிரிகளுக்கு வழங்க வேண்டிய நகலில் நாங்கள் காட்டவில்லை என்றால் சரிதான். எட்டாவது மாதத்திற்கு பின்பு இருந்த காலகட்டத்தில் காவல் நிலையத்தில் வந்து எந்த புகார் இது சம்பந்தமாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார்மனுவாக எழுதி கொண்டு வந்திருந்தார்களா இல்லை வாக்குமூலம் வாங்கி பதிவு செய்யப்பட்டதா என்றால் அவர்கள் தங்களுடைய புகார் மனுவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி அங்கிருந்து மேல் நடவடிக்கையாக எடுப்பதற்காக இங்கு அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட மனுவை அனுசரித்ததால் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்களிடம் புகார் கொடுப்பதற்கு முன்பு மாவட்ட ஆட்சித்தலைவரிடம் புகார் கொடுப்பதற்கு முன்பு நிகழ்வுகள் எதையும் சொல்லவில்லை பின் யோசனையாக எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புகார் கொடுத்து அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒருதலைப் பட்சமாக விசாரணை செய்து எதிரிகள் மீது பிழையான இறுதி அறிக்கையை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் அ.சா.1 யை கொடுமை படுத்தவோ அல்லது வரதட்சணை கேட்டு துன்பப்படுத்தவோ ஒன்னாவது எதிரி வேறு திருமணம் செய்தது உண்மை இல்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து கொண்டேன் அது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இரண்டாவது திருமணம் எங்கு வைத்து யார் முன்னிலையில் நடந்தது என்பதை காட்டுமாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.15 18:36:00 +0530

Judicial Magistrate, Shenkottai